**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-17 No. 02 April-June 2023**

# திருமந்திரம் கூறும் அன்பு நெறி

க.சுகன்யா[1], முனைவர் த.சுவாமிநாதன்[2]

[1]முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்) தமிழ்த்துறை,

[2]உதவிப் பேராசிரியர் &ஆய்வு நெறியாளர்,

[1, 2] பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவுப்பெற்ற அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம் - 612 002

**ஆய்வுச் சுருக்கம்**

மனித வாழ்வு தழைத்து ஓங்க செய்வது அன்பு நெறி என்றால் அது மிகையாகாது. அன்பு என்பது உயிர்கள் மாட்டுச்செலுத்தும் ஒரு வகை உணர்வு ஆகும். 'அன்பு' ஒன்றே இறைவனை அடைய மிகவும் எளிய வழி. மனிதன் அன்பு நெறியைப் பின்பற்றினால் வாழ்வில் எல்லா வளமும் பெற்று வாழ முடியும். இறைவன் எல்லா உயிர்களையும் அன்போடு தான் படைத்தருளுகின்றான் என்பது உண்மை. எனவேதான் அன்புநெறியைப் பல்வேறு அறநூல்கள் வலியுறுத்துகின்றன. திருமூலரும் திருமந்திரத்தில் 'அன்புடைமை' எனும் பகுப்பில் அன்புநெறியை நாட்டு மக்களுக்கு வலியுறுத்தியுள்ளார். இவ்வாய்வு கட்டுரையானது திருமந்திரத்தில் திருமூலர் நாட்டு மக்களின் நல்வாழ்விற்கு உணர்த்திய இறைபேரன்பு, அன்புடையார் அடையும் நற்பேறு, அன்பின் மகத்துவம் ஆகியவைப் பற்றி விளக்குகிறது.

## முன்னுரை

நம் நாட்டின் தொன்மை வாய்ந்த சமயமாகத் திகழ்வது சைவ சமயமாகும். உலக மக்கள் மனத்திலே இறை உணர்வை தூண்டும் வண்ணம் சைவ சமய அருளாசிரியர்கள் பன்னிரு திருமுறைகளை அருளினார்கள். அத்தகு சிறப்பு வாய்ந்த திருமுறை பனுவலாகிய அருள் நூல்களுள் பத்தாம் திருமுறையாகத் திகழ்வது திருமூலர் அருளிய திருமந்திரமாகும். இக்கட்டுரையின் மூலமாகத் திருமந்திரத்தில் திருமூலர் கூறும் அன்பு நெறியைப் பற்றி விரிவாக காண்போம்.

## இறைபேரன்பு

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு ஆணிவேராக இருப்பது அன்பு. எனவே தான் இவ்வுலகம் அன்பின் பிறப்பிடமாகத் திகழ்கிறது. திருமூலரும்

திருமந்திரத்தில் பல பாடல்களில் அன்புநெறியின் மகத்துவத்தை நாட்டு மக்களுக்கு உணர்வோடு ஊட்டியுள்ளார்.

இறைவன் நம் மீது அன்பு செலுத்துகிறான். ஆனால் மக்கள் இறை மீது பற்றுக்கொள்ளாமல் உலக இன்பத்தின் மீது பற்றுக்கொண்டு விரைவில் அழிந்துவிடுகின்றனர் என்பதை திருமூலர் நாட்டு மக்களுக்கு வலியுறுத்தியுள்ளார். மேலும் திருமூலர் இறைவன் மீது அன்பு கொள்ளுங்கள் என்று அறிவுறுத்துவதுடன், இறைவன் அன்பு வடிவமாகத் திகழ்கிறான் என்பதை,

**"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"** (1)

எனும் மந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இறைவனின் திருவடிப்பேற்றை அடைவதற்கான வழியாக அன்பு எனும் உயரிய நெறியை யாவரும் பின்பற்றலாம். சிவபெருமான் உலகின் அன்பைப் படைத்த பரம்பொருளாக விளங்குகிறான் என்றால் மிகையாகாது. அவனே அன்பு வடிவமாக எங்கும் நிறைந்து உள்ளான் என்பதை உலகத்தார் உணர்வதில்லை.

சிவபெருமான் உலகின் அனைத்து உயிர்களுக்கும் தலைவனாக விளங்குபவன். எங்கும் நிறைந்த பரம்பொருளாகத் திகழ்பவன். உலகத்தில் படைத்த அனைத்து உயிர்கள் மீது நீங்காத அன்பினை நல்குபவன். இத்தகு சிறப்பு வாய்ந்த இறைவன் மீது பேரன்பு கொண்டவிதத்தை,

**பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்**
**மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை**
**துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்**
**பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே. -திருமந்.**271

எனும் மந்திரத்தில் திருமூலர் நயம்படச் சுட்டிக்காட்டியுள்ளார்

இறைவன் பொன்னிறத்தைக் கடந்த சிவந்த இடையிலே புலித்தோலினைக் கட்டியவன்: இளம்பிறை நிலாவைத் தலையிலே சூடியவன், சுடுகாட்டுச் சுடலை வெண்ணீற்றைத் திருமேனியிலே விளங்குமாறு பூசிக்கொண்டு ஊழிக்கூத்தை ஆடியவன்! இத்தகைய இறைவனிடம் எனது பெரிய அன்பு உறவாகிப் பின்னிப் பிரிக்க முடியாமல் கிடந்தது என்று திருமூலர் தனது இறை அன்பை வெளிப்படுத்தியுள்ளார்.

**தாயுமானவரும்,**

**எவ்வுயிரும் என்னுயிர்போர் எண்ணி இரங்கவும் நின்**
**தெய்வம் அருட் கருணை செய்யாய் பராபரமே** (2)

மேலும்,

**அன்பை பெருக்கி எனது ஆயிரைக் காக்கவந்த**
**இன்பப் பெருக்கே இறையே பராபரமே** (3)

எனும் கண்ணிகளில் மக்களுக்கு அன்புநெறியை வலியுறுத்தியுள்ளார்.

**அன்புடையார் அடையும் நற்பேறு**

திருமூலர் இறைவன் மீது நீங்காத பற்றினைக் கொண்டவர்கள். அவனது திருவடியை அடைவர் எனக் கூறியுள்ளார். இறை அன்பு இல்லாதவர் பெறும் துன்பத்தை,

**பாரம் உடையவர் காண்பார் பவம்தன்னை**
**கோர நெறி கொடு கொங்குபுக் காரே** (4)

எனும் மந்திர அடிகளில் இறைஅன்பு இல்லாதவர்கள் துன்பமான காட்டில் போகும் வழியை அறியாது வருந்துவர் எனக் கூறியுள்ளார்.

இறைவனின் மீது பற்றுக் கொண்டவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் எவ்வித துன்பமும் வராது. இறை அன்பு இல்லாதவர்கள் இம்மையில் மட்டுமின்றி மறுமையிலும் துன்பம் அடைவது உறுதி. உலக மக்கள் இறைப்பற்று இல்லாமல் உலகப்பற்றை அடைவதிலே மனதினைச் செலுத்துகின்றனர்.

இறைவன் தன்னை அறியும் அறிவு கொண்டவரிடத்து அவர் அன்பில் நின்றருளும் தன்மை கொண்டவன், அவன் அன்பே உடலாகக்கொண்டு உள்ளான். அன்பு வழியில் அணுகுபவர்களுக்கு அவன் துணையாக வருவதை,

**அன்பினுள் ளார்க்கே அணைதுணை ஆமே**

**-திருமந்.** 279:4

எனும் மந்தி அடியினால் அறியலாம்.
மாணிக்கவாசகரும் திருவாசகத்தில்,

**அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை**
**ஆனந்தமாய் கசிந்து உருக**
**என்பரம் அல்லாஇன் அருள் தந்தாய்**
**யான் இதற்கு இவர்ஓர் கைம்மாறு** (5)

என்ற பாடல அடிகளில் இறைவனின் அருள் சிறப்பினைக் கூறியுள்ளார்.

திருமூலர் இறைவன் தன் மீது உண்மையான அன்பு காட்ட வல்லார்க்கு மகிழ்ந்து அன்பு செலுத்தும் அருள் செய்வான் என்பதை,

**கொழுந்து அன்பு செய்துஅருள் கூரவல்லார்க்கு**
**மகிழ்ந்து அன்புசெய்யும் அருள்அது ஆமே**

**-திருமந்.**280:3-4

எனும் மந்திர அடிகளில் குறிப்பிட்டுள்ளார்.

சிவபெருமான் தன் மீது உண்மையாக அன்பு செலுத்தும் அடியார்களுக்கு அருள் எனும் மழையை நல்குவான். மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் இறைவன் மீது உண்மையான அன்பினை செலுத்த வேண்டும். இறை அன்பு மனிதனின் மனதினை செம்மைப்படுத்துவதுடன் வாழ்வினை மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

**மெய்கண்டாரும் திருக்களிற்றுப்படியாரில்,**

**உள்ள முதலனைத்து பொன்றை வொருவரில்**
**உள்ள முருக துன்னுடனாந் - தெள்ளி**
**உணருமர் தாங்க ளுளராக வென்றும்**
**புணருமவ னில்லாப் பொருள்** (6)

என்ற பாடலில் உள்ள மலங்களை எல்லாம் ஒடுங்கி அழியும்படி தம்மை மறந்து அன்பு செயின் உள்ளம் உருகும்படியான இறைவன் உடன்கலப்பான் எனக்கூறியுள்ளார்.

**அன்பின் மகத்துவம்**

திருமூலர் இறைவன் திருவடி அருளைப் பெற வேண்டுமென்றால் அவனது திருவடி மீது நீங்காத அன்பினைச் செலுத்துதல் வேண்டும் எனக் கூறியுள்ளார். மேலும் அன்பு நெறியால் மட்டுமே இறைவனது திருவருளைப் பெற முடியும் என்பதை உலகினர்க்கு உணர்த்தியுள்ளார்.

**முன்பு பிறப்பு இறப்பும் அறியாதார்**
**அன்பில் இறைவனை யாமறி வோமென்பர்**
**இன்பப் பிறப்பும் இறப்பும் இலான்நந்தி**
**அன்பி லவனை அறியகி லாரே** (7)

எனும் மந்திரத்தில் இறைவனை அன்பால் வணங்கி பிறப்பையும் இறப்பையும் போற்றிக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**காரைக்கால் அம்மையாரும்,**

**நாமாலை சூடியும் நம்மீசன் பொன்னடிக்கே**
**பூமாலை கொண்டு புனைந்தன்பாய் - நாமோர்**
**அறிவினையே பற்றினால் எற்றே தடுமே**
**எறிவினையே என்னும் இருள்** (8)

எனும் அற்புதத்திருவந்தாதி பாடலில் சிவபெருமானை அன்பினால் வழிப்பாட்டால் ஆணவம் என்னும் வினை அழிந்கு போகும் தன்மையைக் கூறியுள்ளார்.

**முடிவுரை**

மனித வாழ்வியல் அறங்களை மையமாகக்கொண்ட இலக்கியமே நிலைபேறு அடையும். அவ்வகையில் நிலைப்பேறுடைய சைவ இலக்கியங்களுள் ஒன்றான திருமந்திரத்தில் திருமூலர் நாட்டு மக்கள் நல்வாழ்விற்குரிய அன்புநெறியை பற்றி சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். மனித வாழ்விற்குரிய அன்பு நெறியை சமய நோக்கில் வலியுருத்தியுள்ளார். திருமூலர் வழி அன்பு நெறியை நாம் பின்பற்றினால் இறையருள் பெற்று நிலையான இன்பத்தை எய்தலாம் என்பதில் ஐயமில்லை.

**சான்றெண் விளக்கம்**

1. திருமூலர், திருமந்திரம், முதல் மூன்று தந்திரங்கள், பா.270
2. தாயுமானவர், ஸ்ரீ தாயுமான சுவாமிகள், பாடல்கள், பராபரக்கண்ணி 65
3. மேலது., பராபரக்கண்ணி 14
4. திருமூலர், மு.நூ., பா.273, 3-4
5. கா.சுப்பிரமணிய பிள்ளை, திருவாசகம், கோயில் திருப்பதிகம், பா.2
6. கா.சுப்பிரமணிய பிள்ளை, திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் பா.14
7. திருமூலர், மு.நூ., பா.287
8. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ) - காரைக்கால் அம்மையாரின் அற்புதத்திருவந்தாதி மூலமும் உரையும். பா.87

**துணைநூற்பட்டியல்**

**முதன்மை சான்று**

1. திருமூலர், - திருமந்திரம் முதல் மூன்று தந்திரங்கள், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, ஸ்ரீ நமச்சிவாய மூர்த்தி அச்சகம், திருவாவடுதுறை - பதிப்பு 2001

**துணைமைச்சான்று**

2. கா.சுப்பிரமணிய பிள்ளை, (உ.ஆ) - திருவாசகம், திருநெல்வேலி தென்னிந்திய, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை-600 018. பதிப்பு-1993.

3. சுப்பிரமணியபிள்ளை.கா (உ.ஆ) - திருவுந்தியார் திருகளிற்றுப்படியார், திருநெல்வேலி தென்னிந்திய, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை-600 018. பதிப்பு-1999.

4. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ) - காரைக்கால்அம்மையாரின் அற்புதக் திருவந்தாதி மூலமும்

ISSN: 2320-4842
Vol-17 No. 02 April-June 2023

உரையும், சாரதா பதிப்பகம், சென்னை-600 014. பதிப்பு - 2007.

5. தாயுமானவர் - ஸ்ரீ தாயுமான சுவாமிகள் பாடல்கள், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை - 639 115. பதிப்பு 1994